Makkal Osai, pg 1 & 13, 1 Sep 2020

# ருக்குன் நெகாரா வாழ்க்கையின் சுவாசம்



கோலாலம்பூர், செப். 1- ருக்குன் நெகாரா கோட்பாடுகள் ஒரு வாசிப்பு அம்சம் மட்டும் அல்ல. நம் வாழ்க்கையில் இரண்டறக் கலந்துவிட்ட ஓர் அம்சமாக பின்பற்றப் பட வேண்டும் என்று நாட்டின் 63ஆவது சுதந்திர தினக் கொண்டாட்ட நிகழ்ச்சியில் மாமன்னர் அல்-சுல்தான் அப்துல்லா ரியாதுடின் அல்-முஸ்தாபா பில்லா ஷா அறிவுறுத்தினார்.

ருக்குன்

பக்கம் 13

முதல் பக்கத் தொடர்ச்சி...

## ருக்குன் நெகாரா...

நெகாரா உணர்வுகள் நாட்டின் பல இன மக்கள், சமயங்கள், கலாச்சாரங்கள் ஆகியவற்றை ஒற்றுமையுடன் பிணைக்கும் ஒரு தூணாக விளங்குகிறது. ஒவ்வொருவரது வாழ்க்கையிலும் அது பின்பற்றப்பட்டு கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

பல்வேறு வாழ்க்கை நெறிகள், பரஸ்பர மரியாதை, பணிவு போன்ற கலாச்சாரங்களின் வழி ருக்குன் நெகாரா மக்களின் ஒற்றுமைக்கு வலுசேர்க்கின்றது.

அதன் கோட்பாடுகளை நாட்டின் தலைவர்கள், அரசாங்கம், மக்கள் உட்பட அனைத்து தரப்பினரும் ஒரு வழிகாட்டியாக எடுத்துக்கொள்ள வேண்டும் என்று மாமன்னர் வலியுறுத்தினார்.

முன்னதாக பேரரசர் அல்-சுல்தான் அப்துல்லா, பேரரசியார் துங்கு ஹஜ்ஜா அஸிஸா அமினா மைமுனா இஸ்கண்டாரியா காலை 8.00 மணிக்குப் புத்ரா ஜெயா டத்தாரான் பாஹ்லவான் நெகாராவை வந்தடைந்தனர்.

அரச தம்பதியரைப் பிரதமர் டான்ஸ்ரீ முஹிடின் யாசின், தொடர்பு மற்றும் பல்லூடக அமைச்சரும் தேசிய தினக் கொண்டாட்டக் குழுவின் தலைவருமான டத்தோ சைஃபுடின் அப்துல்லா வரவேற்றனர்.

ருக்குன் நெகாரா கோட்பாடுகள் 1970ஆம் ஆண்டில் பிரகடனம் செய்யப்பட்டது. அதன் 5 கோட்பாடுகளும் பல இன மக்கள், சமயம், கலாச்சாரம், மொழிகள் ஆகியவற்றால் ஏற்படும் அனைத்து வேறுபாடுகளையும் களைந்து ஒற்றுமையுடனும் புரிந்துணர்வுடனும் வாழ்வதற்கு வழிசெய்துள்ளன.

Akhbar : Makkal Osai

Tarikh : 1 September 2020

Muka surat : 1 & 13

Tajuk : **Rukun Negara merupakan asas perpaduan**

Ringkasan : Rukun Negara bukan sekadar dijulang secara simbolik menerusi bacaan saban tahun ketika sambutan Hari Kebangsaan, titah Al-Sultan Abdullah Ri'ayatuddin Al-Mustafa Billah Shah. Yang di-Pertuan Agong sebaliknya menitipkan pesanan bahawa roh dan semangat Rukun Negara yang berupaya menjadi tiang seri perpaduan rakyat berbilang bangsa, agama dan kaum itu harus dihayati serta diamalkan dalam setiap aspek kehidupan. Rukun Negara menuntut perpaduan rakyat dibentuk menerusi budaya sopan, santun, hormat dan disulami pelbagai nilai murni. Oleh yang demikian, prinsip itu harus dijadikan panduan dan amalan oleh semua pihak, termasuk pemimpin negara, kerajaan serta rakyat secara keseluruhannya," titah baginda, hari ini. Terdahulu, Al-Sultan Abdullah dan Raja Permaisuri Agong Tunku Hajah Azizah Aminah Maimunah Iskandariah berangkat tiba di Dataran Pahlawan Negara, dekat Presint 1, di Putrajaya, di sini, tepat pada jam 8 pagi tadi. Keberangkatan tiba baginda berdua disambut Perdana Menteri, Tan Sri Muhyiddin Yassin dan Menteri Komunikasi dan Multimedia merangkap Pengerusi Jawatankuasa Induk Hari Kebangsaan dan Hari Malaysia, Datuk Saifuddin Abdullah. Rukun Negara telah diisytiharkan pada tahun 1970. Semua lima prinsip Rukun Negara adalah formula bagaimana rakyat yang berbilang bangsa, agama, budaya, bahasa, boleh mengatasi segala perbezaan